சுருக்கம்

பள்ளிக் கல்வித் துறை – மெட்ரிகுலேசன் பள்ளிகள் / மெட்ரிகுலேசன் மேல்நிலைப் பள்ளிகள் – தேவையான குறைந்தபட்ச நிலப்பரப்பு பூர்த்தி செய்யாத பள்ளிகளுக்கு தற்காலிக அங்கீகாரம் 31.05.2016 வரை வழங்குதல் – ஆணை வெளியிடப்படுகிறது.

பள்ளிக் கல்வி (பொ.நூ.2) துறை

அரசாணை(நிலை) எண்.135

நாள் 18.08.2015
திருவள்ளுவராண்டு, 2045
ஆவணி 1

படிக்கப்பட்டவை:

1. அரசாணை (2டி) எண்.48 பள்ளிக் கல்வித் (எக்ஸ்2) துறை, நாள் 21.07.2004.
2. அரசாணை (2டி) எண்.24 பள்ளிக் கல்வித் (எக்ஸ்2) துறை, நாள் 23.04.2010.
3. அரசாணை (நிலை) எண்.238 பள்ளிக் கல்வித் (எக்ஸ2) துறை, நாள் 26.11.2008.
4. அரசாணை (2டி) எண்.54 பள்ளிக் கல்வித் (எக்ஸ்2) துறை, நாள் 05.03.2013.
5. மெட்ரிகுலேசன் பள்ளிகள் இயக்குநர் கடித ந.க. எண்.1554/அ1/2013, நாள் 03.08.2015.

*******

ஆணை:-

மேலே ஒன்றாவதாக படிக்கப்பட்ட அரசாணையில் மெட்ரிகுலேசன் / மெட்ரிகுலேசன் மேல்நிலைப் பள்ளிகளுக்கு அங்கீகாரம் வழங்குவதற்குத் தேவையான குறைந்தபட்ச நிலப்பரப்பு, உட்கட்டமைப்பு வசதிகள் ஆகியவை வரையறுக்கப்பட்டு ஆணை வெளியிடப்பட்டுள்ளது. அவ்வரசாணையில் பள்ளிகளுக்கான குறைந்தபட்ச நிலப்பரப்பினைப் பொறுத்தவரை பள்ளிகள் அமைந்துள்ள பகுதிகள் தன்மைக்கேற்ப பரப்பளவு கீழ்க்குறித்தவாறு நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது:-

| | |
|---|---|
| மாநகராட்சிப் பகுதி | – 6 மனையிடம் |
| மாவட்டத் தலைநகரம் | – 8 மனையிடம் |
| நகராட்சிப் பகுதி | – 10 மனையிடம் |
| பேரூராட்சிப் பகுதி | – 1 ஏக்கர் |
| ஊராட்சிப் பகுதி | – 3 ஏக்கர் |

2. 2012–2013–ஆம் ஆண்டிற்கான பள்ளிக் கல்வித் துறையின் மானியக் கோரிக்கையின் போது மாண்புமிகு அமைச்சர் (பள்ளிக் கல்வித் துறை) அவர்கள் கீழ்க்கண்ட அறிவிப்பினை வெளியிட்டார்கள்:

"தமிழகத்தில் செயல்படும் தனியார் பள்ளிகளைத் தொடங்க மற்றும் அங்கீகாரம் வழங்கத் தேவையான குறைந்தபட்ச நிலம் வரையறுக்கப்பட்டுள்ளது. தற்போது செயல்படும் பல பள்ளிகள் இந்த நிபந்தனையைப் பூர்த்தி செய்யாததால் அங்கீகாரம் வழங்க இயலாத நிலை உள்ளது. தமிழ்நாடு குழந்தைகளுக்கான இலவச மற்றும் கட்டாயக் கல்வி உரிமைக்கான விதிகள், 2011 நடைமுறைப்படுத்தப்படுவதால் அங்கீகாரம் இல்லாமல் பள்ளிகள் செயல்பட இயலாத சூழ்நிலை ஏற்பட்டுள்ளது. எனவே, குறைந்தபட்ச நிலத்தினைத் தொடக்க, நடுநிலை, உயர்நிலை, மேல்நிலைப் பள்ளிகள் வாரியாகவும், மாணவர் எண்ணிக்கை மற்றும் வகுப்புகளின் எண்ணிக்கைக்கு ஏற்பவும் நிர்ணயம் செய்ய வல்லுநர் குழு அமைக்கப்படும்"

3. மெட்ரிகுலேசன் பள்ளிகள் இயக்குநர் மேலே ஐந்தாவதாக படிக்கப்பட்ட கடிதத்தில் குறைந்தபட்ச நிலத் தேவையினைப் பூர்த்தி செய்யாத பள்ளி நிர்வாகங்களுக்கு, நிலத்திற்கான விலை மிக உயர்ந்துள்ளதைக் கருத்தில் கொண்டு மேற்படி நிபந்தனையை நிறைவேற்ற மூன்று அல்லது நான்கு ஆண்டுகள் கால அவகாசம் மேலே ஒன்றில் காணும் அரசாணையில் அளிக்கப்பட்டது என்றும், மேலே இரண்டாவதாக படிக்கப்பட்ட அரசாணையில் குறைந்தபட்ச நிலத்தேவை ஒரே அமைவிடத்தில் (composite) இருக்கவேண்டும் என்று ஆணையிடப்பட்டது என்றும், இந்நிலையில் பல மெட்ரிகுலேசன் / மெட்ரிகுலேசன் மேல்நிலைப் பள்ளி நிர்வாகங்கள் குறைந்தபட்ச நிலப்பரப்பு தேவையை பூர்த்தி செய்யாத நிலையில் பள்ளி நிர்வாகத்தினர் கீழ்க்குறிப்பிட்டுள்ள காரணங்களை முன்வைத்தன எனத் தெரிவித்துள்ளார்.

(i) பள்ளியின் அமைவிடத்தையொட்டி கூடுதல் நிலப்பரப்பு வாங்க இயலாத நிலை, காலியிடம் இல்லாததால் குறைந்தபட்ச தேவையைப் பூர்த்தி செய்ய இயலாத நிலை.

(ii) மாநகராட்சி பகுதியிலும், நன்கு வளர்ச்சியடைந்துவரும் பகுதிகளிலும் கூடுதல் நிலப்பரப்பு வாங்க இயலாத அளவிற்கு நிலத்தின் விலை பன்மடங்கு உயர்ந்து குத்தகையாகப் பெறுவதற்கும் வாய்ப்பு இல்லாத நிலை.

4. மேலும், மாணாக்கர்களின் கல்வி நலன் மற்றும் பள்ளி நிர்வாகங்களால் தெரிவிக்கப்பட்ட காரணங்களை கருத்தில் கொண்டு, ஏற்கனவே துறை அனுமதி / அங்கீகாரம் பெற்று தொடர்ந்து செயல்பட்டுவரும் மெட்ரிகுலேசன் / மெட்ரிகுலேசன் மேல்நிலைப் பள்ளி நிர்வாகங்களுக்கு குறைந்தபட்ச நிலப்பரப்பு தேவையை பூர்த்தி செய்ய ஏற்கனவே வழங்கப்பட்ட கால அவகாசம் முடிவுற்ற நிலையில், மேலும் மூன்றாவதாகப் படிக்கப்பட்ட அரசாணையில் மேலும் மூன்றாண்டுகளுக்கு கால அவகாசம் அளித்து ஆணையிடப்பட்டது என்றும், அதனைத் தொடர்ந்து இவ்வகைப் பள்ளிகளுக்கு 31.05.2011 வரை தற்காலிக அங்கீகாரம் வழங்கப்பட்டது என்றும், மேற்குறிப்பிட்டுள்ளவாறு கால அவகாசம் அளித்தும் தமிழகத்தில் உள்ள மெட்ரிகுலேசன் / மெட்ரிகுலேசன் மேல்நிலைப் பள்ளிகளில் 746 பள்ளிகள் இந்த குறைந்தபட்ச நிலத் தேவையினை பூர்த்தி செய்யாமல் செயல்பட்டு வருகின்றன என்றும் மெட்ரிகுலேசன் பள்ளிகள் இயக்குநர் தெரிவித்துள்ளார்.

5. மேலும், மெட்ரிகுலேசன் பள்ளிகள் இயக்குநர், மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்களால் சட்டமன்றப் பேரவையில் பள்ளிக்கல்வித் துறை மானியக் கோரிக்கையின்போது வெளியிடப்பட்ட அறிவிப்பினைச் செயல்படுத்தும் பொருட்டு அறிக்கை

அளிக்க பள்ளிக் கல்வி இயக்குநர் தலைமையில் வல்லுநர்குழு அமைத்து ஆணையிடப்பட்டது என்றும், அவ்வல்லுநர் குழுவால் அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டு அரசின் ஆய்வில் உள்ள நிலையில், 31.05.2011 வரை தற்காலிக அங்கீகாரம் வழங்கப்பட்ட 746 மெட்ரிகுலேசன் / மெட்ரிகுலேசன் மேல்நிலைப் பள்ளிகளுக்கு தொடர்ந்து அங்கீகாரம் வழங்குவது நிறுத்தி வைக்கப்பட்டுள்ளது என்றும், இவ்வாறு அங்கீகாரம் 31.05.2011–வுடன் முடிவடைந்த பள்ளிகளில் மொத்தம் 5,12,107 மாணவ / மாணவியர் கல்வி பயின்று வருகின்றனர் என்றும், மேற்படி பள்ளிகளில் கல்வி பயின்ற மாணவ / மாணவியருக்கு வழங்கப்பட்ட மாற்றுச் சான்றிதழ் மற்றும் மதிப்பெண் பட்டியல்களை முறைப்படுத்தும் பொருட்டும், பள்ளிகளுக்கு அங்கீகாரச் சான்றிதழ் அத்தியாவசியத் தேவை என்பதாலும், பள்ளியில் அன்றாடம் ஏற்படும் சிறுசிறு நிர்வாகப் பிரச்சனைகளுக்கும், பள்ளி வாகனத்தின் தரச்சான்றினை புதுப்பிக்க நடப்பில் உள்ள அங்கீகாரச் சான்று தேவைப்படுகிறது என்றும், குழந்தைகளுக்கான கட்டாயக் கல்வி உரிமைச் சட்டம் 2009, பிரிவு 18 (5)–ன்படி அங்கீகாரம் முடிவடைந்து பள்ளியை நடத்திவருவது மேற்படி சட்டத்தை மீறிய செயலாகும் என்றும் தெரிவித்து குழந்தைகளுக்கான இலவச மற்றும் கட்டாயக் கல்வி உரிமைச் சட்டத்தின்படி பள்ளிகள் முறையான அங்கீகாரம் பெற்று செயல்படும் வகையிலும், நிலப் பற்றாக்குறையாக உள்ள 746 பள்ளிகளில் பயிலும் 5,12,107 மாணவ / மாணவியர் கல்வி நலன் கருதியும், இதர அனைத்து அடிப்படைத் தேவைகளையும் பூர்த்தி செய்திருந்தால் குறைந்தபட்ச நிலத் தேவையினைப் பூர்த்தி செய்யவேண்டும் என்ற நிபந்தனையுடன் 31.05.2016 வரை தற்காலிக அங்கீகாரம் வழங்க ஆணை வெளியிடும்படி அரசைக் கோரியுள்ளார்.

6. மெட்ரிகுலேசன் பள்ளிகள் இயக்குநரின் கருத்துருவை கவனமாக பரிசீலித்து, ஏற்று தமிழ்நாடு குழந்தைக்களுக்கான இலவச மற்றும் கட்டாயக் கல்வி உரிமைக்கான விதிகள் 2011–ன்படி உரிய அங்கீகாரம் பெறாமல் பள்ளிகள் செயல்பட இயலாத நிலை உள்ளதையும், பள்ளிக் கல்வி இயக்குநர் தலைமையில் பள்ளிகள் துவங்க குறைந்தபட்ச நிலம் நிர்ணயம் செய்ய அமைக்கப்பட்டக்குழு அரசுக்கு அறிக்கை சமர்ப்பித்து ஆய்வில் உள்ளதை கருத்தில் கொண்டும், குறைந்தபட்ச இடத்தேவையை பூர்த்தி செய்யாததால், உரிய அங்கீரகாரம் வழங்கப்படாமல் செயல்படும் 746 பள்ளிகளுக்கு, அப்பள்ளிகளில் பயிலும் மாணவர்களின் நலனைக் கருத்தில் கொண்டு, இதர அனைத்து அடிப்படைத் தேவைகளை பூர்த்தி செய்திருந்தால் குறைந்தபட்ச நிலத்தேவையினைப் பூர்த்தி செய்ய வேண்டும் என்ற நிபந்தனையுடன் 31.05.2016 வரை தற்காலிக அங்கீகாரம் வழங்க மெட்ரிகுலேசன் பள்ளிகள் இயக்குநருக்கு அனுமதி அளித்து அரசு ஆணையிடுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

த.சபிதா
அரசு முதன்மைச் செயலாளர்.

பெறுநர்
மெட்ரிகுலேஷன் பள்ளிகள் இயக்குநர், சென்னை–6
பள்ளிக் கல்வி இயக்குநர், சென்னை–6
தொடக்கக் கல்வி இயக்குநர், சென்னை–6

// ஆணைப்படி அனுப்பப்படுகிறது //

பிரிவு அலுவலர்